மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

(ஆ) தமிழ்நாடு நகரமைப்பு மற்றும் ஊரமைப்புத் திட்ட (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகரமைப்பு மற்றும் ஊரமைப்புத் திட்ட (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு அன்னையின் பாதம் பணிந்து, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகரமைப்பு மற்றும் ஊரமைப்புத் திட்ட (திருத்தச்) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

2002 ஏப்ரல் 10] [பேரவைத் தலைவர்]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

முற்பகல் 11-25

7. மானியக் கோரிக்கைகள், 2002-2003, விவாதமும் வாக்கெடுப்பும் — தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 19 - உயர் கல்வித் துறை—தொடர்ச்சி

(ஆ) கோரிக்கை எண் 41 - பள்ளிக் கல்வித் துறை—தொடர்ச்சி

(இ) கோரிக்கை எண் 47 - இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை—தொடர்ச்சி

(ஈ) கோரிக்கை 44 - தமிழ் வளர்ச்சி - பண்பாடு மற்றும் அறநிலையத் துறை - தமிழ் வளர்ச்சி - பண்பாடு—தொடர்ச்சி

(உ) கோரிக்கை எண் 37 - பொதுத் துறை—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கல்வி மானியக் கோரிக்கையின் மீதான விவாதம். திரு. வி.கே. லட்சுமணன்.

***திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கல்வி மானியக் கோரிக்கையிலே என்னுடைய கருத்துகளைத் தெரிவிக்கும் முன்பாக கடந்த 1991-96 ஆம் ஆண்டு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆட்சியில் இருந்தபோதும், இப்போது பொறுப்பேற்று இருக்கின்றபோதும் என்னுடைய சில கோரிக்கைகளை ஏற்று நிறைவேற்றிக்